2000 மார்ச் 3]

34. கடந்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் அனைத்து மாவட்டங்களிலும் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்கவும், பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திடுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கவும் தொடக்கக் கல்வி இயக்க முனைப்பு நடவடிக்கைகளை அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. பள்ளிகளில் கணினிக் கல்வியை அளிக்கும் திட்டத்தின்கீழ், முதல் கட்டமாக 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினிக் கல்விக்கான வசதிகளை அரசு அளித்துள்ளது. எஞ்சிய அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், அரசுக் கல்லூரிகளுக்கும் அடுத்த கல்வியாண்டில் இத்தகைய வசதிகளை செய்து கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

35. நகர்ப்புற ஏழை மகளிருக்கு சிறு வியாபாரம் செய்ய குறைந்த வட்டி வீதத்தில், எளிதில் கடன் கிடைக்கும் வகையில், "மகளிர் சிறு வணிக சேமிப்புடன் இணைந்த கடன் திட்டம்" என்றழைக்கப்படும் திட்டத்தின்கீழ் 55,956 மகளிருக்கு ரூ.5.35 கோடி கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில், சென்னை மாநகர் நீங்கலாக ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்டத்தினை அரசு செயல்படுத்தியுள்ளது. 2000 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நிலவரப்படி, 22,000 சுய உதவிக் குழுக்களில் சேர்ந்து 4.2 இலட்சம் மகளிர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

36. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து இரண்டாவது திட்டத்தின் கீழ் ஏற்கெனவே பயனடைந்த 318 வளர்ச்சி வட்டாரங்களில் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மூன்றாவது திட்டம் நடப்பு நிதியாண்டில் செயல்படத் தொடங்கியுள்ளது. உலக வங்கியிடமிருந்து இதற்காக 5 ஆண்டு காலத்தில் ரூ.86.95 கோடி நிதியுதவி பெறப்படும். கருவுற்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேலும் உயர்த்துவதற்கும், இளம் பெண்களின் உடல் நலம் மற்றும் அவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்குமான பல்வேறு திட்டப் பணிகளை ஒருமுனைப்படுத்திட இத்திட்டம் உதவிடும்.

37. அனைவருக்கும் முழுமையான சுகாதார நலத்தை அளிக்கும் நோக்கத்துடன், திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்ட "வருமுன் காப்போம் திட்டம்" மாநிலம் முழுதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், தொலைதூரத்தில் உள்ள, அரசு மருத்துவ அமைப்புகள் இல்லாத கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

[2000 மார்ச் 3

இம்மருத்துவ முகாம்களில், நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களால் அனைவருக்கும் உடல் நலப் பரிசோதனை செய்யப்படுவதோடு, நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளும் வழங்கப்படுகின்றன. நோயைக் கண்டறிந்து போக்குவதற்கும், தேவையான சுகாதார நலப் பணிகளை மக்களுக்குப் பெருமளவில் அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏராளமானோர் இத்திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்திற்கு மக்களிடமிருந்து பெருமளவு வரவேற்பு கிடைத்து வருகிறது. இதுவரை 1016 முகாமகளில் 11,32,855 பேர் பயனடைந்துள்ளனர்.

38. சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன், இந்த அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூ.17.50 கோடி செலவில், 50 இடங்களில் "பெரியார் நினைவு சமத்துவபுரங்களை" ஏற்படுத்தி வருகிறது. இதுவரையில், 64 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன; மேலும் 86 சமத்துவபுரங்கள் அமைக்கும்பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

39. தமிழகத்தில் பொதுவாக தொழில் அமைதி நிலவி வருகின்றது. தொழிலாளர் நலனுக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தொழிற்சாலைகள் மூடப்படுவதன் காரணமாக வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.250/- நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்று 1999 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அமைப்பு ரீதியில் அல்லாத பல்லாயிரம் தொழிலாளர்களின் நலனைப் பேண ஒரு வாரியம் உருவாக்கப்பட்டு, அதன் மூலமாக அவர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம், மகப்பேறு நலத் திட்டம், பணி முடிவு நலத் திட்டம் முதலிய திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்பாடு தொடங்கப்பட்டுள்ளது.

40. மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய புதுத் திட்டங்களை உருவாக்குவது எவ்வளவு அவசியமானதோ, அந்த அளவுக்கு ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களினால் உருவான பொதுச் சொத்துக்களை முறையாகப் பராமரித்து வருவதும் முக்கியமானது. இதனை கருத்திற்கொண்டு, வரும் நிதியாண்டில் பராமரிப்புப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி முனைப்பான நடவடிக்கை எடுத்திடவும், முந்தைய ஆண்டுகளில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு, இன்னும் முடிக்கப்படாத பணிகளை விரைவுபடுத்தி முடித்திட முன்னுரிமை அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.